**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**O.S. No. 20 / 2024**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 13.08.2024 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Raniammal (PW 1) | | |

வாதி தரப்பு சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் செய்யப்படும் முதல் விசாரணை தொடர்ச்சி

என் தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

வா.த.ச.ஆ.1 - கடந்த 29.03.1990 அன்று எனதுதகப்பனார் முனுசாமி நாயக்கர் எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.த.ச.ஆ.2 - கடந்த 19.04.2006 அன்று நான் ரங்கசாமி என்பவரை அதிகார நியமராக எழுதி கொடுத்ததாக கூறும் பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.த.ச.ஆ.3 - கடந்த 27.05.2008 அன்று நான் 2ம் வாதியான எனது சகோதரர் கணேசன் என்பவருக்கு தாவா சொத்து சம்பந்தமாக நான் எழுதி கொடுத்த தானசெட்டில்மண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.த.ச.ஆ.4 - கடந்த 22.08.2008 அன்று 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து சம்பந்தமாக எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.த.ச.ஆ.5 - 12.03.2010 அன்று நான் 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய தந்தியின் நகல் மற்றும் அதற்கான ரசீது

வா.த.ச.ஆ.6 - கடந்த 15.03.2010 அன்று 2ம் பிரதிவாதி எனக்கு அனுப்பிய பதில் தந்தி

வா.த.ச.ஆ.7 - கடந்த 20.03.2010 அன்று வாதிகள் தங்கள் வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல்

வா.த.ச.ஆ.8 - அந்த அறிவிப்பை அவர்கள் பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (2 வரிசைகள்)

வா.த.ச.ஆ.9 - கடந்த 24.03.2010 அன்று பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பு

வா.த.ச.ஆ.10 - தாவா சொத்து சம்பந்தமாக குப்புசாமி என்பவர் பெயரில் வழங்கப்பட்ட வரி ரசீது

தாவாப்படி தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1,2 பிரதிவாதிகள் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.